

# த்திரப்
# பாமால

JPL
C4302

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

# நவராத்திரிப் பாமாலை

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



KOHA
JPL

தொகுப்பு:

த. துரைசிங்கம் B. A. [Hons], Dip-in.-Ed,
(கல்வியதிகாரி)

வெளியீடு:-

புவனம் பதிப்பகம்,
''அயோத்தியா''
புங்குடுதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
119648

# முகவுரை

''சக்தி யென்று நேரமெல்லாம் தமிழ்க்கவிதை பாடி
பக்தியுடன் போற்றி நின்ருல் பயமனைத்துந் தீரும்,''

மகாகவி பாரதியின் வாக்கு இது. அனைத்தையும் அருளும் அன்னையின் ஆற்றல்களுக்கோரளவில்லை, அவள் புகழ் பாடும் கவிதைகளுக்கோ கணக்கில்லை. என்றுமுள தென்றமிழ் இயம்பி இசை கொண்ட கவிஞர்கள் அவள் கருணையினுல் அருளிய கவிதைகள் கன்னித்தமிழ் உள்ளவரை நம் நெஞ்சை விட்டகலா. அத்தகு அமுதக் கவிகள் பல தந்த கவிஞர்களது இதயக் கமலத்தே ஊற்றெடுத்த ஒரு சில கவிதைகளைத் தொகுத்து அன்னையைத் தொழுதேத்தும் அன்பர்கள் தம் உளக்கோயில்களில் உறையும் வகையில் வெளியிடுவதில் பெருமகிழ்வுறுகிருேம்.

புவனம் பதிப்பகத்தின் வெளியீடாக மலர்ந்துள்ள இந்நூலை, அன்னை கலைவாணியின் திருவடிகளில் காணிக்கையாக்கி, அவள் அருளை நாடுகிருேம்.

''நம்பினோர் கெடுவதில்லை. நான்குமறைத்தீர்ப்பு
அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம்
பெறலாம்''

— பதிப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய

# சகல கலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும்வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலா வல்லியே. 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே 2
சகல கலா வல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலா வல்லியே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்றும்
காக்குங் கருணைக் கடலே
சகல கலா வல்லியே. 4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்(து)
அஞ்சத் துவச முயர்த்தோன் செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசோத் திருந்தாய்
சகல கலா வல்லியே. 5

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலா வல்லியே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலா வல்லியே. 7

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித் தையுந்தந் தடிமைகொள்
வாய் நளினா சனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலா வல்லியே. 8

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலா வல்லியே. 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலா வல்லியே. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிச்சக்கரவர்த்தி கம்பர் அருளிய

# சரஸ்வதியந்தாதி

## காப்பு

### கலைகளை உணர்விக்கும் அம்மை

ஆய கலைக ளறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கு மென்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

### தாமரைபோலுங் கையாள்

படிக நிறமும் பவளச்செவ் வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையுந் - துடியிடையும்
அல்லும் பகலு மனவரத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

### மனத் தாமரையாட்டி

சீர்தந்த வெள்ளிதழ்ப் பூங்கம லாசனத்
தேவி செஞ்சொற்
றூர்தந்த வென்மனத் தாமரை யாட்டி
சரோருகமேற்
பார்தந்த நாத னிசைதந்த வாரணப்
பங்கயத்தாள்
வார்தந்த சோதியம் போருகத் தாளை
வணங்குதுமே. 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைநான்கும் உரைப்பவள்.

வணங்குஞ் சிலைநுத லுங்கழை தோளும்
வனமுலைமேற்
சுணங்கும் புதியநிலவெழு மேனியுந்
தோட்டுடனே
பிணங்குங் கருந்தடங் கண்களும் நோக்கிப்
பிரமனன்பால்
உணங்குந் திருமுன்றி லாய்மறை நான்கு
முரைப்பவளே. 2

## அமுது தந்து வாழ்விப்பவள்

உரைப்பா ருரைக்குங் கலைகளெல் லாமெண்ணி
லுன்னையன்றித்
தரைப்பா லொருவர் தரவல ரோதண்
டரளமுலை
வரைப்பா லமுதுதந் திங்கெனை வாழ்வித்த
மாமயிலே
விரைப்பா சடைமலர் வெண்டா மரைப்பதி
மெல்லியலே. 3

## மூவுலகும் அமைத்த கலைமகள்.

இயலா னதுகொண்டு நின்றிரு நாமங்க
ளேத்துதற்கு
முயலாமை யாற்றடு மாறுகின் றேனிந்த
மூவுலகுஞ்
செயலா லமைத்த கலைமக ளேநின்
றிருவருளுக்
கயலா விடாம லடியே னையுமுவந்
தாண்டருளே. 4

4202 cc

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செந்தமிழ்ப் பாவை.

அருக்கோ தயத்திலுஞ் சந்திரோ தயமொத்
தழகெறிக்குந்
திருக்கோல நாயகி செந்தமிழ்ப் பாவை
திசைமுகத்தான்
இருக்கோது நாதனுந் தானுமெப் போது
மினிதிருக்கு
மருக்கோல நாண்மல ராளென்னை யாளு
மடமயிலே. 5

## மனவிருளைப் போக்கும் வெயில்.

மயிலே மடப்பிடி யேகொடி யேயிள
மான்பிணையே
குயிலே பசுங்கிளி யேயன்ன மேமனக்
கூரிருட்கோர்
வெயிலே நிலவெழு மேனியின் னேயினி
வேறுதவம்
பயிலேன் மகிழ்ந்து பணிவே னுனதுபொற் 6
பாதங்களே.

## முத்தி தந்தருளும் பாரதி.

பாதாம் புயத்திற் பணிவார் தமக்குப்
பலகலையும்
வேதாந்த முத்தியுந் தந்தருள் பாரதி
வெள்ளிதழ்ப்பூஞ்
சீதாம் புயத்தி லிருப்பா ளிருப்பவென்
சிந்தையுள்ளே
ஏதாம் புவியிற் பெறலரி தாவ
தெனக்கினியே. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகில அண்டமும் பெற்ற தாய்.

இனிநா னுணர்வதென் ணெண்கலை யாளை
யிலகுதொண்டைக்
கனிநாணுஞ் செவ்விதழ் வெண்ணிறத் தாளைக்
கமலவயன்
றனிநா யகியை யகிலாண்ட மும்பெற்ற
தாயைமணப்
பனிநாண் மலருறை பூவையை யாரணப்
பாவையையே. 8

## வேதங்கள் விதிப்பாள்.

பாவுந் தொடையும் பதங்களுஞ்சீருஞ்
பலவிதமா
மேவுங் கலைகள் விதிப்பா ளிடம்விதி
யின்முதிய
நாவும் பகர்ந்ததொல் வேதங்க ளுன்கு
நறுங்கமலப்.
பூவுந் திருப்பதம் பூவா லணிபவர்
புந்தியுமே. 9

## புந்தியிற் கூரிருள் நீக்கும் புதிய மதியம்.

புந்தியிற் கூரிரு ணீக்கும் புதிய
மதியமென்கோ
அந்தியிற் றேன்றிய தீபமென் கோநல்
லருமறையோர்
சந்தியிற் றேன்றுந் தபனனென் கோமணித்
தாமமென்கோ
உந்தியிற் றேன்றும் பிரான்புயந் தோயு
மொருத்தியையே. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
119648

## கருத்தை எல்லாம் திருத்துபவள்

ஒருத்தியை யொன்று மிலாவென் மனத்தி
 னுவந்துதன்னை
இருத்தியை வெண்கமலத்திருப் பாளையென்
 ணெண்கலைதோய்
கருத்தியை யைம்புல 'னுங்கலங் காமற்
 கருத்தையெல்லாந்
திருத்தியை யான்மற வேன்றிசை நான்முகன்
 றேவியையே. 11

## தேவருக்கும் மூவருக்கும் ஞானத்தை விளக்குபவள்.

தேவருந் தெய்வப் பெருமானு நான்மறை
 செப்புகின்ற
மூவருந் தானவ ராகியுள் ளோரு
 முனிவரரும்
யாவரு மேனைய வெல்லா வுயிரு
 மிதழ்வெழுத்த
பூவரு மாதி னருள் கொண்டு ஞானம்
 புரிகின்றதே. 12

## இருளை அரிக்கின்ற தாய்.

புரிகின்ற சிந்தையினூடே புகுந்து
 புகுந்திருளை
அரிக்கின்ற தாய்கின்ற வெல்லா வறிவி
 னரும்பொருளைத்
தெரிகின்ற வின்பங் கனிந்தூறி நெஞ்சத்
 தெளிந்துமுற்ற
விரிகின்ற தெண்ணெண் கலைமா னுணர்த்திய
 வேதமுமே. 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாதவண்டார்க்கும் வெண்டாமரை நாயகி

வேதமும் வேதத்தி னந்தமு மந்தத்தின்
மெய்ப்பொருளாம்
பேதமும் பேதத்தின் மார்க்கமு மார்க்கப்
பிணக்கறுக்கும்
போதமும் போதவு ருவாகி யெங்கும்
பொதிந்தவிந்து
நாதமு நாதவண் டார்க்கும்வெண் டாமரை
நாயகியே. 14

## எவ்வுயிர்க்கும் தாயகமான தாமரையாட்டி

நாயக மான மலரக மாவது
ஞானவின்பச்
சேயக மான மலரக மாவதுந்
தீவினையா
லேயக மாறி விடுமக மாவது
மெவ்வுயிர்க்குந்
தாயக மாவதுந் தாதார் சுவேத
சரோருகமே. 15

## உரைமகள்.

சரோருக மேதிருக் கோயிலுங் கைகளுந்
தாளிணையும்
உரோருக முந்திரு வல்குலு நாபியு
மோங்கிருள்போற்
சிரோருகஞ் சூழ்ந்த வதனமு நாட்டமுஞ்
சேயிதழும்
ஒரோருக மீரரை மாத்திரை யான
வுரைமகட்கே. 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைக் கூட்டப்பிணை.

கருந்தா மரைமலர் கட்டா மரைமலர்
காமருதாள்
அருந்தா மரைமலர் செந்தா மரைமல
ராலயமாத்
தருந்தா மரைமலர் வெண்டா மரைமலர்
தாவிலெழிற்
பெருந்தா மரைமணக் குங்கலைக் கூட்டப்
பிணைதனக்கே. 17

## மனக்கேத மாற்றும் மருந்து.

தனக்கே துணிபொரு ளென்னுந் தொல்வேதஞ்
சதுர்முகத்தோன்
எனக்கே சமைந்த வபிடேக மென்னு
மிமையவர்தாம்
மனக்கேத மாற்று மருந்தென்ப சூடு
மலரென்பன்யான்
கனக்கேச பந்திக் கலைமங்கை பாத
கமலங்களே. 18

## கருத்தில் வைப்பார்தம் மலமகற்றுபவள்

கமலந் தனிலிருப் பாள்விருப் போடங்
கரங்குவித்துக்
கமலங் கடவுளர் போற்றுமென் பூவைகண்
ணிற்கருணைக்
கமலந் தனைக்கொண்டு கண்டொரு காற்றங்
கருத்துள்வைப்பார்
கமலங் கழிக்குங் கலைமங்கை யாரணி
காரணியே. 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரணப் பாவை

காரணன் பாகமுஞ் சென்னியஞ் சேர்தரு
கன்னியரும்
நாரண னாக மகலாத் திருவுமோர்
நான்மருப்பு
வாரணன் றேவியு மற்றுள்ள தெய்வ
மடந்தையரும்
ஆரணப் பாவை பணித்தகுற் றேவ
லடியவரே. 20

## பணிவார் தமது மயல் இரவின் விடிவு

அடிவேத நாறுஞ் சிறப்பார்ந்த
மனத்தினுக்கு
முடிவே தவள முளரிமின் னேமுடி
யாவிரத்தின
வடிவே மகிழ்ந்து பணிவார் தமது
மயலிரவின்
விடிவே யறிந்தென்னை யாள்வார் தலந்தனில்
வேறிலையே. 21

## வெண்டாமரை மலர்ச் சேயிழை

வேறிலை யென்று னடியாரிற் கூடி
விளங்குநின் பேர்
கூறிலை யானுங் குறித்துநின் றேனெம்
புலக்குறும்பர்
மாறிலை கள்வர் மயக்காம னின்மலர்த்
தாணெறியிற்
சேறிலை யீந்தருள் வெண்டா மரைமலர்ச்
சேயிழையே. 22

4302 c.c

119648

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதிக் கலாமயில் வல்லி

சேதிக்க லாந்தர்க்க மார்க்கங்க ளெவ்வெவர்
சிந்தனையுஞ்
சோதிக்க லாமுறப் பேடோதிக்க லாஞ்சொன்ன
தேதுணிந்து
சாதிக்க லாமிகப் போதிக்க லாமுத்தி
தானெய்தலாம்
ஆதிக்க லாமயில் வல்லிபொற் றுளை
யடைந்தவரே. 23

## உபநிடதப் படையாள்

அடையாள நாண்மல ரங்கையி லேடு
மணிவடமும்
உடையாளை நுண்ணிடை யொன்றுமி லாளை
யுபநிடதப்
படையாளை யெவ்வுயி ரும்படைப் பாளைப்
பதுமநறுந்
தொடையாளை யல்லது மற்றினி யாரைத்
தொழுவதுவே. 24

## செஞ்சொற் கலைமங்கை.

தொழுவார் வலம்வரு வார்துதிப் பார்தந்
தொழின்மறந்து
விழுவா ரருமறை மெய்தெரி வாரின்ப
மெய்புளகித்
தழுவா ரினுங்கண்க ணீர்மல்கு வாரென்க
ணுவதென்னை
வழுவாத செஞ்சொற் கலைமங்கை பாலன்பு
வைத்தவரே. 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உய்க்கும் பொருள் உரைக்கும் கலைமான்.

வைக்கும் பொருளுமில் வாழ்க்கைப் பொருளுமற்
றெப்பொருளும்
பொய்க்கும் பொருளன்றி நீடும் பொருளல்லப்
பூதலத்தின்
மெய்க்கும் பொருளு மழியாப் பொருளும்
விழுப்பொருளும்
உய்க்கும் பொருளுங் கலைமா னுணர்த்து
முரைப்பொருளே. 26

## வந்திப்பவர்க்கு ஒளி

பொருளா லிரண்டும் பெறலாகு மென்ற
பொருள்பொருளோ
மருளாத சொற்கலை வான்பொரு ளோபொருள்
வந்துவந்தித்
தருளாய் விளங்கு மவர்க்கொளி யாயறி
யாதவருக்
கிருளாய் விளங்கு நலங்கிளர் மேனி
யிலங்கிழையே. 27

## தெளியுஞ் சொல் மான்

இலங்குந் திருமுக மெய்யிற் புளக
மெழுங்கண்கணீர்
மலங்கும் பழுதற்ற வாக்கும் பலிக்கு
மனமிகவே
துலங்கு முறுவல்செ யக்களி கூருஞ்
சுழல்புனல்போற்
கலங்கும் பொழுது தெளியுஞ்சொன் மானைக்
கருதினர்க்கே. 28

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சிலும் நாவிலும் நிற்கும் பெருந்திரு

கரியா ரளகமும் கண்ணுங் கதிர்முலைக்
கண்ணுஞ்செய்ய
சரியார் கரமும் பதமும் மிதழுந்
தவளநறும்
புரியார்ந்த தாமரை யுந்திரு மேனியும்
பூண்பணவும்
பிரியாதென் னெஞ்சினு நாவினு நிற்கும்
பெருந்திருவே. 29

## பெருந்திருவும் சய மங்கையுமானவள்

பெருந்திரு வுஞ்சய மங்கையு மாகியென்
பேதைநெஞ்சில்
இருந்தருளுஞ் செஞ்சொல்வஞ்சியைப் போற்றின்
எல்லாவுயிர்க்கும்
பொருந்திய ஞானந் தருமின்ப வேதப்
பொருளுந்தருந்
திருந்திய செல்வந் தருமழி யாப்பெருஞ்
சீர்தருமே. 30

சரஸ்வதி யந்தாதி முற்றுப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

உ

# அபிராமி அந்தாதி

## காப்பு

### கட்டளைக் கலித்துறை

தாரமர் கொன்றையும் சண்பக மாலையும் சாத்தும் தில்லை
ஊரர்தம் பாகத் துமைமைந்த னேஉல கேழும்பெற்ற
சீர்அபி ராமிஅந் தாதிஎப் போதும்என் சிந்தையுள்ளே
கார்அமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.

## நூல்

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயம்என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே.

துணையும் தொழும்தெய்வ மும்பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையும்மென் பாசாங் குசமும்கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவ தறிந்தனமே.

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேன்நின் அன்பர் பெருமைஎண் ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழுநர குக்குற வாய மனிதரையே.

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைந்த
புனிதரும் நீயும்என் புந்திஎந் நாளும் பொருந்துகவே

119648

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையாள்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சமு தாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம்என் சென்னியதே.

சென்னிய துன்பொற் றிருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய துன்திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்அடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய தென்றும் உன் றன்பர மாகம பத்ததியே.

ததியுறும் மத்திற் சுழலும்என் ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண் டாய்கம லாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கிஎன்றும்
துதியுறு சேவடி யாய்சிந் துரானன சுந்தரியே.

சுந்தரி எந்தை துணைவிஎன் பாசத் தொடரைஎல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னள்மகி டன்தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாள்மலர்த் தாள்என் கருத்தனவே.

கருத்தன எந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பால்அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும்
முருத்தன மூரலும் நீயும்அம் மேவந்தென் முன்னிற்கவே.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவ துன்மலர்த் தாள்எழு தாமறையின்
ஒன்றும் அரும்பொரு ளேஅரு ளேஉமை யேஇமயத்
தன்றும் பிறந்தவ ளேஅழி யாமுத்தி ஆனந்தமே.

ஆனந்த மாய்என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்த மான வடிவுடை யாள்மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணார விந்தம் தவளநிறக்
கானந்தம் ஆடரங் காம்எம்பி ரான்முடிக் கண்ணியதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிய துன்புகழ் கற்பதுன் நாமம் கசிந்துபத்தி
பண்ணிய துன்இரு பாதாம் புயத்தில் பகல்இரவா
நண்ணிய துன்னை நயந்தோர் அவையத்து நான்முன்செய்த
புண்ணியம் ஏதென்அம் மேபுவி ஏழையும் பூத்தவளே.

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேஎன்றும் மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேஉன்னை அன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே.

வந்திப் பவர்உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவர் அழி யாப்பர மானந்தர் பாரில்உன்னைச்
சந்திப் பவர்க்கெளி தாம்எம்பி ராட்டிநின் தண்ணளியே.

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள்செய்வார்
மண்ணளிக் கும்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் கும்செல் வமும்அழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் கும்சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே.

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிட மேஎண்ணில் ஒன்றும்இல்லா
வெளியே வெளிமுதற் பூதங்கள் ஆகி விரிந்த அம்மே
அளியேன் அறிவள விற்கள வான ததிசயமே.

அதிசய மான வடிவுடை யாள்அர விந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தர வல்லி துணைஇரதி
பதிசய மான தபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகஅன் றோவாம பாகத்தை வவ்வியதே.

வவ்விய பாகத் திறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன்என் மேல்வரும் போது வெளிநிற்கவே.

KOHA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநின்ற நின்திரு மேனியைப்பார்த்தென் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிகின்ற ஞானம் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே.

உறைகின்ற நின்திருக் கோயில்நின் கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறை யின் அடி யோ முடி யோ அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோகஞ்சமோஎன்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே.

மங்கலை செங்கல சம்முலை யாள்மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாளுடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மால்இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே
அடியேன் இறந்திங் கினிப்பிற வாமல்வந் தாண்டுகொள்ளே

கொள்ளேன் மனத்தில்நின் கோலம்அல் லாதன்பர் கூட்டந்
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக் (தன்னை
குள்ளே அனைத்தினுக் கும்புறம் பேஉள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்கும் களியே அளியஎன் கண்மணியே

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழ கேஅணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே

பின்னே திரிந்துன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண் டேன்முதல் மூவருக்கும்
அன்னே உலகுக் கபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனிஉன்னை யான்மற வாமல்நின் றேத்துவனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏத்தும் அடியவர் ஈரே ழுலகினை யும்படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவ ராம்கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல் அணங் கேமணம் நாறும்நின் தாளிணைக்கென்
நாத்தங்கு புன்மொழி ஏறிய வாறு நகையுடைத்தே.

உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை நெஞ்சத் தழுக்கை யெல் லாம்நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின் அருள் ஏதென்று சொல்லுவதே

சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும்அவர்க் கேஅழி யாஅரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே.

சித்தியும் சித்தி தரும் தெய்வம் ஆகித் திகழும்பரா
சத்தியும் சத்தி தழைக்கும் சிவமும் தவம்முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியி னுள்ளே புரக்கும் புரத்தையன்றே.

அன்றே தடுத்தென்னை ஆண்டுகொண் டாய்கொண்ட தல்ல
நன்றே உனக்கினி நான்என் செயினும் நடுக்கடலுள் (என்கை
சென்றே விழினும் கரையேற் றுகைநின் திருவுளமே
ஒன்றே பலஉரு வேஅரு வேஎன் உமையவளே.

உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில்வந்திங்
கெமையும் தமக்கன்பு செய்யவைத் தார்இனி எண்ணுதற்குச்
சமையங் களும்இல்லை ஈன்றெடுப் பாள்ஒரு தாயும் இல்லை
அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே

ஆசைக் கடலில் அகப்பட் டருள்அற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற் படஇருந் தேனைநின் பாதமெனும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லு வேன்ஈசர் பாகத்து நேரிழையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழைக்கும் வினைவழி யேஅடும் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந் தஞ்சல்என் பாய் அத்தர் சித்தம்எல்
குழைக்குங் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே (லாம்
உழைக்கும் பொழுதுன்னையே அன்னை யேஎன்பன் ஓடிவந்தே.

வந்தே சரணம் புகும்அடி யாருக்கு வானுலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கற் பருமணி ஆகமும் பாகமும்பொற்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே

திங்கட் பகவின் மணம்நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட் கொருதவம் எய்திய வாஎண் ணிறந்தவிண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம்எய்து மோ நரங் கக்கடலுள்
வெங்கட் பணிஅணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே.

பொருளே பொருள்முடிக் கும்போக மே அரும் போகம்செய்
மருளே மருளில் வரும்தெரு ளேஎன் மனத்துவஞ்சத் (யும்
திருள்ஏதும் இன்றி ஒளிவெளி ஆகி இருக்கும் உன்றன்
அருள்ஏ தறிகின்றி லேன் அம்பு யாதனத் தம்பிகையே.

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை விட அரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும்எட்டுத்
திக்கே அணியும் திருவுடை யானிடம் சேர்பவளே.

பவளக் கொடியிற் பழுத்தசெவ் வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகை யும்துணை யாஎங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணைமுலை யாள்
அவளைப் பணிமின்கண் டீர்அம ராவதி ஆளுகைக்கே.

ஆளுகைக் குன்றன் அடித்தா மரைகள்உண் டந்தகன்பால்
மீளுகைக் குன்றன் விழியின் கடைஉண்டு மேல்இவற்றின்
மூளுகைக் கென்குறை நின்குறை யேஅன்று முப்புரங்கள்
மாளுகைக் கம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாணுதலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற் கெண்ணிய எம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சிற்
காணுதற் கண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு
பூணுதற் கெண்ணியஎண்ணம்அன்றேமுன்செய்புண்ணியமே.

புண்ணியம் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியும் செய்ய கணவரும் கூடிநம் காரணத்தால்
நண்ணிஇங் கேவந்து தம்அடி யார்கள் நடுஇருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேற்பத்ம பாதம் பதித்திடவே

இடங்கொண்டு விம்மி இணைகொண் டிறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண் டிறைவர் வலிய
நெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குற் பனிமொழி வேதப் பரிபுரையே.

பரிபுரச் சீறடிப் பாசாங் குசைபஞ்ச பாணிஇன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர்செம் பாகத் திருந்தவளே.

தவளே இவள்எங்கள் சக்கர நாயகி மங்கலமாம்
அவளே அவர்தமக் கன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்
துவளேன் இனிஒரு தெய்வம்உண் டாகமெய்த் தொண்டு
செய்தே

தொண்டுசெய் யாதுநின் பாதம் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தார்உள ரோஇல ரோஅப் பரிசடியேன்
கண்டுசெய் தால்அது கைதவ மோஅன்றிச் செய்தவமோ
மிண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கை
அன்றே

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்அடி யாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன் றேபுது நஞ்சைஉண்டு
கறுக்கும் திருமிடற் றான்இடப் பாகம் கலந்தபொன்னே
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான்உன்னை வாழ்த்துவனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் படிஒன்று கண்டுகொண் டேன்மனத் தேஒருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும்எட் டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில்ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சில்
இடரும் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே.

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும்அப் போது வளைக்கை அமைத்
தரம்பை அடுத்த அரிவையர் சூழவந் தஞ்சல்என்பாய்
நரம்பை அடுத்த இசைவடி வாய்நின்ற நாயகியே,

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கிஎன்
நாயகி யாதி உடையாள் சரணம் அரண்நமக்கே.

அரணம் பொருள்என் றருள்ஒன் றிலாத அசுரர்தங்கள்
முரண்அன் றழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன் அடியார்
மரணம் பிறவி இரண்டும்எய் தார்இந்த வையகத்தே.

வையம் துரகம் மதகரி மாமகு டம்சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள்அடித் தாமரைக் கன்புமுன்பு
செய்யும் தவம்உடை யார்க்குள வாகிய சின்னங்களே.

சின்னஞ்சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையும்முத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில்வைத்துத்
தன்னந் தனிஇருப் பார்க்கிது போலும் தவம் இல்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகம் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



இல்லாமை சொல்லி ஒருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவி ரேல்நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால்ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

மின்னா யிரம்ஒரு மெய்வடி வாகி விளங்குகின்ற
அன்னாள் அகமகிழ் ஆனந்த வல்லி அருமறைக்கு
முன்னாய் நடுஎங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
உன்னா தொழியினும் உன்னினும் வேண்டுவ தொன்றில்லையே.

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்திவ் வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கிநிற் பாள்என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாஇப் பொருள் அறிவார் (ளே
அன்று ஆலிலையில் துயின்றபெம் மானும்என் ஐயனுமே.

ஐயன் அளந்த படிஇரு நாழிகொண் டண்டமெல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும் போற்றி ஒருவர் தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யும்கொண்டு சென்றுபொய்யும்
மெய்யும் இயம்பவைத் தாய்இது வோஉன்றன் மெய்யருளே.

அருணும் புயத்தும்என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணும் புயமுலைத் தையனல் லாள்தகை சேர்நயனக்
கருணும் புயமும் வதனும் புயமும் கராம்புயமும்
சரணும் புயமும்அல் லாற்கண்டி லேன்ஒரு தஞ்சமுமே.

தஞ்சம் பிறிதில்லை ஈதல்ல தென்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேன்ஒற்றை நீள்சிலையும்
அஞ்சம் பும் இக்கல ராசநின் றாய்அறி யார்எனினும்
பஞ்சஞ்சும் மெல்லடி யார்அடி யார்பெற்ற பாலரையே.

பாலினும் சொல்இனி யாய்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினும்தேவர் வணங்கநின்றோன்கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும்மெய்ப் பீடம்ஒரு
நாலினும் சாலநன் றோஅடி யேன்முடை நாய்த்தலையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயேனை யும்இங் கொருபொரு ளாக நயந்துவந்து
நீயேநினைவின்றி ஆண்டுகொண்டாய்நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந் தாய்என்ன பேறுபெற்றேன்
தாயே மலைமக ளேசெங்கண் மால்திருத் தங்கைச்சியே.

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்துமத
வெங்கட் கரிஉரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் மலரும்எப் போதும்என் சிந்தையதே

தேறும் படிசில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள்குன்றிற் கொட்டும் தறிகுறிக் கும்சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்ப தறிந்திருந்தும்
வேறும் சமயம்உண் டென்று கொண் டாடிய வீணருக்கே

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கஅன்பு
பூணேன் உனக்கன்பு பூண்டுகொண் டேன்நின் புகழ்ச்சி
பேணேன் ஒருபொழு தும்திரு மேனிப்ர காசமன்றிக் (யன்றிப்
காணேன் இருநில மும்திசை நான்கும் ககனமுமே.

ககனமும் வானும் புவனமும் காணவிற் காமன் அங்கம்
தகனம்முன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையும்செம்
முகனும்முந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனும்உண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே.

வல்லபம் ஒன்றறி யேன்சிறி யேன்நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்றொன்றி லேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்தொடுத்த
சொல்அவ மாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே.

தோத்திரம் செய்து தொழுதுமின் போலும்நின் தோற்றம்ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில்லை யாதவர் வண்மைகுலம்
கோத்திரம் கல்வி குணம்குன்றி நாளும் குடில்கள்தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரும் புனலும் கனலும்வெங் காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவைஒளி ஊறொலி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாரும் தவம்உடை யார்படை யாத தனம்இல்லையே

தனம்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வ வடிவும் தரும்நெஞ்சில் வஞ்சம்இல்லா
இனம்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே.

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியில்
பண்களிக் கும்குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமும் ஆகி மதங்கர்குலப்
பெண்களில் தோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே.

அழகுக் கொருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றநெஞ் சேஇரங் கேல்உனக் கென்குறையே.

என்குறை தீரநின் றேத்துகின் றேன்இனி யான்பிறக்கின்
நின்குறை யேஅன்றி யார்குறை காண்இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரஎங் கோன்சடை மேல்வைத்த தாமரையே.

தாமம் கடம்பு படைபஞ்ச பாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுதெமக் கென்றுவைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்கொளி செம்மைஅம்மை
நாமம் திரிபுரை ஒன்றோ டிரண்டு நயனங்களே.

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயனென்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்குவர் கற்பக தாருவின் நீழலில் தாயர்இன்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்கிவர் பூங்குழ லாள்திரு மேனி குறித்தவரே

குறித்தேன் மனத்தில்நின் கோலம்எல் லாம் நின்குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப் பிரான்ஒரு கூற்றை
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே. (மெய்யிற்

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிர்அவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகிஎன்றே
செயிர்அவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத் தேன்என் துணைவிழிக்கே.

விழிக்கே அருளுண் டபிராம வல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே

கூட்டிய வாஎன்னைத் தன்அடி யாரில் கொடியவினை
ஓட்டிய வாஎன்கண் ஓடிய வாதன்னை உள்ளவண்ணம்
காட்டிய வாகண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டிய வாநடம் ஆடகத் தாமரை ஆரணங்கே.

அணங்கே அணங்குகள் நின்பரி வாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்து கிலேன்நெஞ்சில் வஞ்சகரோ
டிணங்கேன் எனதுன தென்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன் றிலேன்என்கண் நீவைத்த பேரளியே.

அளியார் கமலத்தில் ஆரணங் கேஅகி லாண்டமும்நின்
ஒளியாக நின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுதொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின்எங்ங னேமறப் பேன்நின் விரகினையே.

விரவும் புதுமலர் இட்டுநின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல் லார்இமை யோர்எவரும்
பரவும் பதமும் அயிரா வதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே

உடையாளை ஒல்குசெம் பட்டுடை யாளை ஒளிர்மதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்குநுண்ணூல்
இடையாளை எங்கள்பெம் மானிடை யாளை இங் கென்னைஇனிப்
படையாளை உங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே

பார்க்கும் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்
டார்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும்என் அல்லல் எல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை மேல்முத்து மாலையுமே.

மால்அயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலன்என் மேல்விடும் போது வெளிநில்கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பனிமொழியே

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்தி என்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யால்மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டம் எல்லாம்
பழிக்கும் படிஒரு பாகம் கொண் டாளும் பராபரையே.

பரம்என் றுனைஅடைந் தேன்தமி யேனும்உன் பக்தருக்குள்
தரம்அன் றிவன்என்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரம்அன் றெரியப் பொருப்புவில் வாங்கிய போதில்அயன்
சிரம்ஒன்று செற்றகை யான்இடப் பாகம் சிறந்தவளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறக்கும் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும்நின் துணைவரும் நீயும் துரியமற்ற
உறக்கம் தரவந் துடம்போ டுயிர்உற வற்றறிவு
மறக்கும் தொழுதெனமுன் னேவரல் வேண்டும் வருந்தியுமே

வருந்தா வகைஎன் மனத்தா மரையினில் வந்துபுகுந்
திருந்தாள் டழைய இருப்பிட மாக இனிஎனக்குப்
பொருந்தா தொருபொருள் இல்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதை நல்கும் மெல்லியலே.

மெல்லிய நுண்ணிடை மின்னனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்னனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும்அடி யாரைத் தொழும் அவர்க்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பக டூரும் பதம்தருமே. (குப்

பதத்தே உருகிநின் பாதத்தி லேமனம் பற்றிஉன்றன்
இதத்தே ஒழுக அடிமைகொண் டாய்இனி யான்ஒருவர்
மதத்தே மதிமயங் கேன்அவர் போன வழியும்செல்லேன்
முதல்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே.

நகையே இஃதிந்த ஞாலம்எல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவில்அந்த
வகையே பிறவியும் வா்போ மலைமகள் என்பதுநாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே

விரும்பித் தொழும்அடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்தமாகி அறிவிழந்த
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னவெல்லாம்
தரும்பித்தர் ஆவரென் றால்அபி ராமி சமயம்நன்றே.

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான்அறிவ
தொன்றேயும் இல்லை உனக்கே பரம்எனக் குள்ளவெல்லாம்
அன்றே உனதென் றளித்துவிட் டேன்அழி யாதகுணக்
குன்றே அருட்கட லேஇம வான்பெற்ற கோமளமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோமள வல்லியை அல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை ஏதமி லாளை எழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயில் தன்னைத்தம்மால்
ஆமள வும்தொழு வார்எழு பாருக்கும் ஆதிபரே.

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன் முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.

தைவந்து நின்அடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறும் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சின்அல் லால்ஒரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சிற் புகஅறி யாமடப் பூங்குயிலே.

குயிலாய் இருக்கும் கடம்பா டவியிடைக் கோலஇயல்
மயிலாய் இருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீதன்னமாம்
கயிலா யருக்கன் றிமவான் அளித்த கனங்குழையே.

குழையத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும் கரும்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்நகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில்எப் போதும்உதிக்
-கின்றவே

## பயன்

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவிஅடங்கக்
காத்தாளை அங்குச பாசாங் குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்கொரு தீங்
-கில்லையே.

— அபிராமி பட்டர் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமகளே! அருளை வழங்கு

மல்லாண்ட திண்தோள் மணிவண்ணன் மார்பகத்துப்
புல்லாண்ட செம்பதுமைப் பொன்பாவாய் - வில்லாண்ட
நல்நுதலீ ! ஞாலம் நயக்கும் நளினமலர்த்
துன்னு தலைவி! துணை.

திருமகளே! தேன்ஒழுகு செந்தா மரைமேல்
வருமகளே! ஆனந்தவல்லீ! - ஒரு பொழுதும்
உன்னை நினையார் உளரோ? நினைக்கின்ற
என்னையும் காப்பாய் இனிது.

செந்தா மரைவாழ் திருமடந்தாய்! இன்பமே
தந்தாள வல்ல தயாதேவீ! -எம்தாயே
ஆக்கம் அருளி அனவ ரதமும் நீயே
காக்க வரல் வேண்டும் கனிந்து.

திருபாற் கடல் தோன்றித் தேசமெங்கும் மேலாம்
விருப்பால் தொழநின்ற மின்னே! -மருத்துளவ
மாலின் எழில் மார்பில் மன்னுதிருப்பொன்னே! எம்
பால்இன் அருள்புரிகண் பார்த்து.

செந்தா மரையாளே! செல்வங்கள் அத்தனையும்
தந்தாளவல்ல தயாதேவி! - எம்தாயாய்
இன்பமே நல்கும் இலக்குமியே ! -எங்கட் (கு) உன்
மன் னருளை என்றும் வழங்கு.

பாற்கடலில் வந்த பவளத் திருப்பாவாய்!
மாற்குச் சிறந்த மனையாட்டி! -வேல்கண்
குயிலே! தமியேன் குறைதீர்க்கும் மின்னே!
மயிலே! அருளை வழங்கு.

-ரெ. இராமமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமகள் துதி.

இராகம்: நாட்டை தாளம்: சதுஸ்ர ஏகம்

மலரின் மேவு திருவே - உன்மேல்
மையல் பொங்கி நின்றேன்
நிலவு செய்யும் முகமும் - காண்பார்
நினைவ ழிக்கும் விழியும்
கலக லென்ற மொழியும் - தெய்வக்
களிது லங்கு நகையும்
இலகு செல்வ வடிவும் - கண்டுன்
இன்பம் வேண்டு கின்றேன். 1

கமல மேவுந் திருவே - நின்மேல்
காத லாகி நின்றேன்
குமரி நின்னை இங்கே - பெற்றோர்
கோடி யின்ப முற்றார்
அமரர் போல வாழ்வேன் - என்மேல்
அன்பு கொள்ளை யாயின்
இமய வெற்பின் மோத - நின்மேல்
இசைகள் பாடி வாழ்வேன். 2

வாணி தன்னை என்றும் - நினது
வரிசை பாடவைப்பேன்
நாணி யேக லாமோ? - என்னை
நன்க றிந்தி லாயோ?
பேணி வைய மெல்லாம் - நன்மை
பெருக வைக்கும் விரதம்
பூணும் மைந்த ரெல்லாம் - கண்ணன்
பொறிக ளாவ ரன்றோ? 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னும் நல்ல மணியும் - சுடர்செய்
பூண்க ளேந்தி வந்தாய்
மின்னு நின்றன் வடிவிற் - பணிகள்
மேவி நிற்கும் அழகை
என்னு ரைப்ப னேடி - திருவே
என்னு யிர்க்கொ ரமுதே
நின்னை மார்பு சேரத் - தழுவி
நிகரி லாது வாழ்வேன். 4

செல்வ மெட்டு மெய்தி - நின்னுற்
செம்மை யேறி வாழ்வேன்
இல்லை யென்ற கொடுமை - உலகின்
இல்லை யாக வைப்பேன்
முல்லை போன்ற முறுவல் - காட்டி
மோக வாதை நீக்கி
எல்லை யற்ற சுவையே - எனைநீ
என்றும் வாழ வைப்பாய், 5

- பாரதியார்

## அன்னை காமாட்சித்தாயே!

வழித்துணைத் தெய்வம் நீயே, வருமிடர் களைவாய் நீயே
மொழித்துணை முதலும் நீயே, மொய்த்திடும் ஆர்வம் நீயே
கழித்திடும் காம பாசக். கட்டறுத் தெம்மைக் காத்தே
அளித்திடும் அன்பும் நீயே, அன்னைகா மாட்சித் தாயே.

- புலியூர்க் கேசிகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதா பராசக்தி.

மாதா பராசக்தி வையமெலாம் நீ நிறைந்தாய்!
ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்கு பாரினிலே!
ஏதாயினும் வழிநீ சொல்வாய் எமதுயிரே!
வேதாவின் தாயே! மிகப்பணிந்து வாழ்வோமே!

## வாணி

வாணி கலைத் தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணிமுத்தைப் போலே அறிவுமுத்து மாலையினுள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெல்லாங் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே.

## ஸ்ரீதேவி

பொன்னரசி நாரணனார் தேவி, புகழரசி
மின்னுநவ ரத்தினம்போல் மேனி யழகுடையாள்
அன்னையவள் வையமெலாம் ஆதரிப்பாள், ஸ்ரீதேவி
தன்னிரு பொற்றாளே சரண் புகுந்து வாழ்வோமே.

## பார்வதி

மலையிலேதான் பிறந்தாள் சங்கரனை மாலையிட்டாள்
உலையிலே யூதி உலகக் கனல் வளர்ப்பாள்
நிலையில் உயர்ந்திடுவாள் நேரே அவள் பாதம்
தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே.

—பாரதியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையைத் தொழுவோம்.

தாவறு முலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் றுணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதோ றிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம்.

—கந்தபுராணம்

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் — வெள்ளை
அரியா சனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனம் வைத்த தாய்.

—காளமேகப்புலவர்

நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள்
தேடிக் கொழிக்குங் கவிவாணர் நாவும் செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்து நடம்
ஆடிக் களிக்கும் மயிலே உன்பாதம் அடைக்கலமே.

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை.

கரும்புமுரல் கடிமலர்ப்பூங்குழல் போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச்சிலை போற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்து என்னை எடுத்து ஆண்ட
அங்கயற்கண் எம்பிராட்டி
அரும்பும் இளநகை போற்றி ஆரணநூ
புரஞ்சிலம்பும் அடிகள் போற்றி.

—திருவிளையாடற்புராணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணங்துவம் வாரீர்!

இராகம்; ஆனந்த பைரவி தாளம்: சாப்பு

1. வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத்திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள்
(வெள்ளைத்)

2. மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோதகன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள்.
(வெள்ளைத்)

3. வஞ்ச மற்ற தொழில் புரிந்துண்டு
வாழும் மாந்தர் குலதெய்வ மாவாள்
வெஞ்ச மர்க்குயி ராகிய கொல்லர்
வித்தை யோர்ந்திடு சிற்பியர், தச்சர்
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்
வீர மன்னர்பின் வேதியர் யாரும்
தஞ்ச மென்று வணங்கிடுந் தெய்வம்
தாரணி மீதறி வாகிய தெய்வம்.
(வெள்ளைத்)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தெய்வம் யாவும் உணர்ந்திடுந் தெய்வம்
தீமைகாட்டி விலக்கிடுந் தெய்வம்
உய்வ மென்ற கருத்துடை யோர்கள்
உயிரி னுக்குயிராகிய தெய்வம்
செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கைவருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம்.
(வெள்ளைத்)

5. செந்த மிழ்மணி நாட்டிடை யுள்ளீர்
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்!
வந்தனம் இவட் கேசெய்வ தென்றால்
வாழியஃதிங் கெளிதன்று கண்டீர்!
மந்திரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசை யாக அடுக்கி அதன்மேல்
சந்த னத்தை மலரை இடுவோர்
சாத்தி ரம்இவள் பூசனை யன்றாம்.
(வெள்ளைத்)

6. வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி
தேடு கல்வியி லாததொ ரூரைத்
தீயி னுக்கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்.
(வெள்ளைத்)

— பாரதியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டவரந்தருவாய்.

தேடியுனைச் சரணடைந்தேன், தேசமுத்துமாரி
கேடதனை நீங்கிடுவாய் கேட்ட வரந்தருவாய்
பாடியுனைச் சரணடைந்தேன் பாசமெலாங்களைவாய்
கோடிநலஞ் செய்திடுவாய் குறைகளெல்லாந் தீர்ப்பாய்

எப்பொழுதுங் கவலையிலே இணங்கி நிற்பான் பாவி
ஒப்பியுன தேவல் செய்வேன் உனதருளால் வாழ்வேன்
சக்தியென்று நேரமெல்லாந் தமிழ்க் கவிதை பாடி
பக்தியுடன் போற்றி நின்றால் பயமனைத்துந் தீரும்

ஆதாரம் சக்தியென்றே அருமறைகள் கூறும்
யாதானுந் தொழில்புரிவோம் யாதுமவள் தொழிலாம்
துன்பமே இயற்கையெனும் சொல்லை மறந்திடுவோம்
இன்பமே வேண்டி நிற்போம் யாவுமவள் தருவாள்
நம்பினோர் கெடுவதில்லை நான்கு மறைத்தீர்ப்பு
அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம்.

—மகாகவிபாரதியார்

மன்னுமழைதவழ் குழலு மதி நிகருந்
திருமுகமு மலர்ப்பூங்கையும்
பன்னுதமிழ்ப் பால்சுரக்கும் பயோதரமும்
மறைகொழிக்கும் பவளவாயுந்
துன்னுமணி த்தசுழுடையுந் துடியிடையுந்
துலங்கிடவைந் தொழிற்கும் வித்தாய்ப்
பொன்னனையானிடத்தமர்ந்த மின்னனையாள்
பொற்பாதம் போற்றல் செய்வாம்.

— திருப்பூவணப்புராணம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வஞ்சிக் கொடியே வருக.

தொடுங்குங் கடவுட் பழம்பாடல் தொடையின் பயனே
நறைபழுத்த
துறைத் தீந்தமிழி னொழுகு நறுஞ்சுவையே அகந்தைக்
கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற் கேற்றும் விளக்கே
வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும் இளமென்பிடியே
யெறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழ
கொழுக எழுதிப்பார்த்திருக்கும் உயிரோவியமே மதுகரம்வாய்
மடுக்கும் குழற்காடேந்து மிளவஞ்சிக் கொடியே வருகவே
மலயத்துவசன் பெற்ற பெருவாழ்வே வருக வருகவே.

— குமரகுருபரசுவாமிகள்

---

## வாழ்வினைத் தந்தருள்வாய்.

அங்கயற் கண்ணியை ஆனந்த ரூபியை அண்டமெலாம்
பொங்கிய இன்னருள் பூத்த புராதனி புங்கவியை
சங்கரி சக்தி சடாதரி சாமளை கோமளையை
செங்கை எடுத்தவர் தீவினை யாவும் சிதைந்திடுமே.

சிதைத்திடு வாளம்மை சீதேவி என்னிரு தீவினையை
வதைத்திடு வாள்கொண்டு வாட்டிடு வாள்வரு கூற்றுவனை
உதைத்திடு வாள் பிணி ஓட உமையாள் தனைநினைந்து
பதைத்திடு வார் மனம் பற்றிடு வார்க்கொரு தாழ்விலையே

தாழ்விலை என்று தடுமாறும் எம்மையித் தாரணியில்
ஊழ்வினைப் போகமும் ஊட்டிப் புசித்தே உழன்றபின்பு
பாழ்வினை நீக்கிப் பரத்தினைக்காட்டிப் பரமபத
வாழ்வினைத் தந்தருள் வாயன்னை யாவைக்கும் காரணியே.

— கவிஞர் க. நாகலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி துதி

புத்தகத் துள்ளுறை மாதே
பூவில மர்ந்துறை வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்
வேதப் பொருளுக் கிறைவி
முத்தின் குடையுடை யாளே
மூவுலகுந் தொழு தேவி
செப்புக வித்தன முலையாய்
செவ்வரி யோடிய கண்ணாய்
முத்து நிறைந்த வெண்பல்லாய்
முருக்கம் பூமேனி நிறத்தாளே
தக்கோலந் தின்ற துவர்வாயே
சரஸ்வதி என்னும் திருவே
எக்காலு முன்னைத் தொழுவோம்
எழுத்தறி புத்தி பண்ணிவைப்பாய்
அக்கா யெம்பெரு மாட்டி
அழகிய பூவணை மீதே
நோக்கா யென்மிடி தீர
நொடிக்கும் பிராமணத்தி நோக்காயே
சாலிநெல் லரிசி கொண்டு
சரஸ்வதி பூசை பண்ணி
பாலொடு பழத்தை நிரப்பி
பராவித் தொழுவோம் நங்காய்
நங்காய் நங்காய் நமோஸ்து
ஞானக் கொழுந்தே நமோஸ்து
கல்விக் சரசே நமோஸ்து
கணக்கறி தேவி நமோஸ்து
சொல்லும் பொருளே நமோஸ்து
சூட்சமச் சொரூபி நமோஸ்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போற்றுத நாளில்லை தாயே....!

கற்பூர நாயகியே! கனகவல்லி
காளி மகமாயி கருமாரியம்மா!
பொற்கோவில் கொண்ட சிவ காமியம்மா!
பூவிருந்த வல்லி தெய்வ யானையம்மா!
விற்கோல வேதவல்லி! விசாலாட்சி!
விழிக்கோல மாமதுரை மீனாட்சி!
சொற்கோவில் நானமைத்தேன் இங்கு தாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே! (கற்பூர)

புவன முழுதாளுகின்ற புவனேஸ்வரி
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி
நவநவமாய் வடிவாகும் மகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி
உன்னடிமை சிறியனை நீயாதரி (கற்பூர)

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறைவிடத்தில் முறையிடுவேன் தாயே! எந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற
அந்நியரைக் கெஞ்சிடுதல் முறையோ அம்மா
கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவாம்மா
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா
சின்னவனின் குரல்கேட்டுன் முகம் திருப்பு
சிரித்தபடி என்னைத்தினம் வழிஅனுப்பு (கற்பூர)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிரண்டும் உன்னுருவே காணவேண்டும்!
காலிரண்டும் உன்னடியே நாடவேண்டும்
பண்ணமைக்கும் நா உனையே பாடவேண்டும்
பக்தியோடு கையுனையே கூடவேண்டும்
எண்ணமெல்லாம் உன் நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடையதாக வேண்டும்
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா
மகனுடைய குறைகளை நீ தீருமம்மா (கற்பூர)

கும்பிடவோ கையிரண்டு போதவில்லை
கூப்பிடவோ நாவொன்றால் முடியவில்லை
நம்பிடவோ மெய்யதனில் சக்தியில்லை
நடந்திடவோ காலிரண்டால் ஆகவில்லை
செம்பவள வாயழகி உன்னெழிலோ
சின்ன இருகண்களுக்குள் அடங்கவில்லை
அம்பளவு விழியாளே உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவில்லை (கற்பூர)

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்
கயிறாகி உயிராகி உடலாகினாய்
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்
நிலமாகி பயிராகி உணவாகினாய்
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாளில்லை தாயே உன்னை
பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை
(கற்பூர)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமியம்மைப் பதிகம்.

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாதகோலும் ஒரு
துன்பம் இல்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப்பெரிய
தொண்டரொடு கூட்டுகண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே!

## வல்லமை தந்திடுவாள்.

ஓம்சக்தி ஓம்சக்தி ஓம் - பராசக்தி
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி - ஓம்சக்தி
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்

சொல்லுக் கடங்காவே - பராசக்தி
சூரத் தனங்களெல்லாம்
வல்லமை தந்திடுவாள் - பராசக்தி
வாழியென் றேதுதிப் போம்.

தாமரைப் பூவினிலே - சுருதியை
தனியிருந் துரைப்பாள்
பூமணித் தாளினையே - கண்ணிலொற்றிப்
புண்ணிய மெய்திடுவோம்.

செல்வத் திருமகளைத் - திடங்கொண்டு
சிந்தனை செய்திடுவோம்
செல்வமெல் லாந்தருவாள் - நமதொளி
திக்கனைத் தும்பரவும். (ஓம்சக்தி............)

KOHA JPL
4302 C.C
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
119648

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org